மேடாகி இருக்கிறதோ அந்தக் குளங்களை எல்லாம் ஆழப்படுத்தி மழை பெய்கிற காலங்களில் அதிகமான நீரைத் தேக்கக்கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி முக்கியமான, நீர்ப்பரப்பு அதிகம் உள்ள ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்துவதற்காகத்தான் பல இடங்களில் புல்டோசர் மூலமாகக்கூட ஆழப்படுத்துகிற அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, தேவையான, மிக முக்கியமான ஏரிகள் என்ற அந்த வகையில் ஆழப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராசிபுரம் அரசு மருத்துவமனை

*3365 திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசிபுரம் அரசு மருத்துவமனையில் 100 M.A. பவர் கொண்ட நுண்கதிர் கருவி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது இல்லை.

9-45 மணி.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் அரசு மருத்துவமனையில் 100 எம். ஏ. பவர் கொண்ட நுண்கதிர் கருவி அமைக்கும் திட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளார்கள் என்று அறிகிறேன். அது அமைச்சருக்குத் தெரியுமா என்பதை உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட மருத்துவ அலுவலரிடத்தில், இராசிபுரத்தில் இத்தகைய கருவி அமைப்பதற்கான இட வசதி இருக்கிறதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவரது அறிக்கை வந்த பிறகு, அங்கே பணியாளர்கள் நியமிப்பது பற்றியும், கருவிகள் அமைப்பது குறித்தும் முடிவு எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS